நகரத்தார் சங்கம், மதுரை.

ஆருவது ஆண்டு விழா

காரைக்குடி. மெ. செ. மெ. மெ.
மெய்யப்ப செட்டியாரவர்களின்

சிறப்புரை.

சுபகிருது-ஆவணி-கo (26-8-1962)

திருமகள் அச்சகம், காரைக்குடி.

பெரியோர்களே,

நகர நன்மக்களே.

அன்பர்களே,

அங்கயற்கண்ணியொடும் ஆலவாய்ச் சொக்கர் அருள் சுரக்கும் பழம் பெரும் பதி மதுரை மாநகர். வரலாற்றுப் பெருமை மிக்க பழம்பதி இது. மதுரை எங்ஙனம் தொன்மை யானதோ, அங்ஙனமே நமது சமுகமும் தொன்மையானது; பெருமை மிக்கது; அறம் பல ஆற்றிப் பெரும்புகழ்கொண்டது.

பல நூற்றுண்டுகளாக வாணிபத்தால் நாட்டை வளப் படுத்திய இந்தப் பெருங்குலம், வளம் குன்றி வாடாமல் காக்கும் நோக்கத்துடன் தொடங்கப் பெற்ற இச்சங்கம் நல்ல பணியாற்றி, ஐந்தாண்டு நிறைந்து, ஆருவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடவே நாம் இங்கு கூடியிருக்கிரேும். இந்த விழாவில் பங்கு கொள்ளும் வாய்ப்பை எனக்கு நீங்கள் அன்புடன் அளித் திருக்கிறீர்கள். அதற்காக என் மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற முதுமொழி நம்மைக் கொண்டே தோன்றியது. தரைவழியும், கடல்வழியும் பல்வேறு நாடுகட்கும் சென்று, வாணிபம் நடத்தி, நாட்டையும்

நாட்டுப் பொருளாதாரத்தையும் வளமாக்கியவர்கள் நமது முன்னோர். நகரத்தார் என்ற சொல்லே வாணிபச் சங்கத்தினர் என்ற பொருளில் தோன்றியதுதான் என்று ஆராய்ச்சி யாளர்கள் கூறுவார்கள்.

ஐந்நூற்றுவர், தனவணிகர், மகுடபூபால வைசியர், நானு தேசிகள் சித்திரமேழிச் சபையார் என்பனவும் நம்மையே குறிப்பன. பிற்காலத்தில் நாம் பாண்டிநாட்டிற்கு வந்தபின், நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் என்றும் வழங்கப்பெற்று வந்திருக்கிறோம். நாட்டரசன்கோட்டையில் வந்து முதலில் சேர்ந்து வாழ்ந்தமையால் "நாட்டரசன்கோட்டை நகரத் தார்கள்" என்று இருந்து, பின்னர் நாட்டுக்கோட்டை நகரத் தார்கள் என்று ஆயிருக்கிறது என்பது ஆராய்ச்சியாளரின் கருத்து. பாண்டி நாட்டில் நாம், ஏழகத்தார் என்றும் எழுவழி நகரத்தார் என்றும் பெயர்பெற்றுள்ளோம். மன்னவர்களைப் போலவே வணிகர்களும் காவல் படைகளை வைத்திருந்தனர். "ஏழகப்படை" என வரலாற்றுச் சிறப்பைப் பெற்ற, தீரமிக்க படை நம்மதே என்பதை ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொள்ளு கின்றனர். அப்படை பாண்டியர் ஆட்சிக்குப் பேருதவி புரிந்த செயல்களை எல்லாம் கல்வெட்டுக்களில் கண்டு மகிழ முடிகிறது.

வாணிபத்தால் மட்டுமின்றிக் கொடையாலும், புலமை யாலும், பக்தியாலும், இச்சமுகத்தினர் பெரும் புகழ்கொண்டு விளங்கியதை வரலாற்று நூல்கள் உணர்த்திக் கொண்டிருக் கின்றன. இத்தகு பழம் பெருமை மிக்க சமுகம் இன்று வளர்ச்சி குன்றி இருக்கிறது. இது கண்கூடு. எனவே

காலத்திற்கேற்ப நம்மவர் நவீனக் கல்விகள் கற்று, உலகத்தோடு ஒட்டி வளரவேண்டும். ஏதோ எழுதப் படிக்க கணக்குப் போடத் தெரிந்துகொண்டால் மட்டும் போதாது. கல்வித் துறை பலவாக இன்று விரிந்து விளங்குகிறது. எல்லாருக்கும் சம வாய்ப்பும் இருக்கிறது. எல்லாச் சமுகத்தினரும் போட்டி போட்டு முண்டியடித்துக் கொண்டு முன்னேறி வருகிருர்கள். நாம் மட்டும் தயங்கித் தளர்ந்து நின்ருல் எதிர்காலம் நமக்கு இன்பம் தரமாட்டாது. எனவே நாமும் ஊக்கமும், விடா முயற்சியும் கொண்டு, பல்வேறு துறைகளிலும் பயின்று வாழ்வை வளமும் பயனுமுள்ளதாக ஆக்க முனைய வேண்டும்.

நம் முன்னேர்களின் உறுதியும், உழைப்பும், தளர்வறியா உள்ளமும் நமக்கு உணர்வூட்டவேண்டும். எவ்வித வசதியும் வாய்ப்பும் இல்லாத அந்தக் காலத்தில் கடல் கடந்து, தொழில் ஆற்றிப் பெரும் பொருள் ஈட்டிப் பெருமையுடன் வாழ்ந்து, பிறர்க்குதவிய அந்த அருமைப்பாடுகளை எல்லாம் நாம் சிந்திக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் உள்ளத்தில் எழுச்சியும் திராணியும் ஏற்படும்.

ஏலேலசிங்கனும், இயற்பகையாரும், பட்டினத்தாரும், காரைக்காலம்மையான புனிதவதியாரும், கண்ணகியும் போன்ற எண்ணற்ற பெரியோர்களையும் அறவோர்களையும் படைத்த சமுகம் நம் சமுகம் இன்றும் கல்வித்துறையில் தொழில்துறையில், அரசியலில், சமயநெறியில், இன்னும் பிறபல பொதுவாழ்வில் எல்லாம், நம்மவர் சிறப்புடன் மிளிர்கின்றனர். இவர்களுடைய பணிகள் எல்லாம் நம்மவர்க்கு எடுத்துக் காட்டுகளாகும்.

பிற்காலத்தில், கல்வித்துறையில், வன்றெண்டர், சொக்க லிங்கய்யா, பண்டிதமணி கதிரேசச் செட்டியார், போன்ற புலவர் பெருமக்களும், பெத்தாச்சி செட்டியார், ராஜா சர் அண்ணுமலை செட்டியார், டாக்டர் அழகப்பச் செட்டியார் போன்ற கல்வித்துறைப் புரவலர்களும் நம்முடைய பாராட் டிற்குரியவர்கள். அந்த நெறியில் இன்று நம்மிடையில் வாழ்பவர் திருவாளர் கருமுத்து தியாகராசச் செட்டியார். இவர் களுடைய அன்பும் ஆதரவும் கொடையும் கல்வித்துறையிலும், தொழில்துறையிலும் நம்மவர் வளர வாய்ப்பளித்துக் கொண் டிருக்கின்றன. இவர்கட்கெல்லாம் நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்பயன்மிக்க முறையை இன்னும் பல்லோர் பின்பற்றி நமது சமுகம் முன்னேற இறைவன் திருவருள் புரிவாஞக.

நமக்கு என்றுமே சாதி மத விரோதம் கிடையாது. எல்லோரும் வாழவேண்டும் என்றே மனமார விரும்புவர்கள் நாம். "நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை" என்று நம்புபவர்கள். ஆனுல் இன்றைய காலப்போக்கில் நமது நிலை மிகவும் பின் தங்கியதாக ஆகிவிட்டது. நாம் நெடுங்காலமாக நவீனக் கல்வி முறையில் கவனம் செலுத்தாமல் இருந்து விட்டதே அதற்குக் காரணம். அதனுலேதான் நம்மிடையில் நீதி, நிர்வாக, போலீஸ் துறைகளில் உயர்நிலை உத்தியோகஸ் தர்கள் ஒருவர்கூட இன்றுவரை இல்லை. அப்படியிருந்தும் நம்மை அரசாங்கம் ஒரு பின்தங்கிய வகுப்பாக ஏற்றுக்கொள்ள வில்லை. செல்வத்தாலும் தொழிலாலும், பதவியாலும் மிக்க உன்னத மான நிலையில் இருப்பவர்களைக்கூட "மிகவும் பின்தங்கிய

வகுப்பு" என்றும் குறிப்பிட்டு எல்லா வசதிகளையும் தந்து கொண்டிருக்கிறது அரசாங்கம். இவற்றையெல்லாம் நாம் மனத்தில் கொள்ளவேண்டும். அரசாங்கம் தக்க சலுகையும் பாதுகாப்பும் தரவேண்டும் என்று சட்ட ரீதியான வழிகளில் நாம் முயலவேண்டும். அது ஒரு புறம்; மற்றொரு புறத்தில் நம் இளைஞர்கள் கல்வி கற்று முன்னேறுவதற்கு வேண்டிய உதவி ஒத்தாசைகள் கிடைக்கும்படி செய்யவேண்டும். கல்வி கற்றபின் தொழில்துறைகளிலும், உத்தியோகங்களிலும் ஈடு பட்டு வளர வாய்ப்புகள் கிடைக்கும்படியும் செய்யவேண்டும்.

அத்தகைய நன்னோக்கத்துடன் தான் இந்தச் சங்கம் தோற்றுவிக்கப் பெற்றிருக்கிறது. இதைப் போன்றே கம்பைக் கல்விக் கழகமும், திருச்சி நகரத்தார் சங்கமும், சென்னை நகரத்தார் மாணவர் சங்கமும், நற்பணி புரிந்து கொண்டிருக் கின்றன. இவற்றின் சேவைகளுக்கு நமது வாழ்த்தும் பாராட்டும் உரியன. ஆனால் நிலைமையையும் தேவையையும் பார்க்கும் பொழுது இவை போதா. இந்த நன்னோக்கத்தைச் செம்மை யாக நிறைவேற்ற திராணிமிக்க ஒரு மத்திய ஸ்தாபனம் இன்றியமையாதது. செல்வ வளமும், செயலாற்றலும் உள்ள வர்கள் ஒன்று சேர வேண்டும். தேங்கிக்கிடக்கும் நமது பொதுப்பணங்களை எல்லாம் ஒன்று திரட்ட வேண்டும். வெளி நாட்டில் முடங்கிக்கிடக்கும் செல்வங்களைத் திரட்டிக்கொணர்ந்து ஒன்று கூட்ட வேண்டும். அதற்கு மேலே இங்கும் நன்கொடை களையும், மகமைகளையும், சந்தாக்களையும் வசூல் செய்ய வேண்டும். இவற்றையெல்லாம், சேர்த்து ஆண்டவன் அருளை நம்பி, முயன்றோமானால் இன்னும் பத்தாண்டுக் காலத் திற்குள் நமது சமுகம் நல்ல வளர்ச்சியுடையதாக முன்னேறி விடும். இது நமக்கு ஒன்றும் புதிதில்லை. முடியாததுமில்லை.

பண்டைநாளில் நமக்குள் இருந்த ஒற்றுமையும், உதவி செய்து உயர்த்த வேண்டும் என்ற உணர்ச்சியும் மீண்டும் நம்மிடையில் மலரவேண்டும். ஊக்கமும் உழைப்பும், சகிப்புத் தன்மையும் நமக்கு ரத்தத்தில் ஊறியவை. எவ்வித வசதியு மில்லாத அந்தக் காலத்தில், ஊர் பேர் தெரியாத, பேச்சுப் புரியாத, புதிய புதிய நாடுகட்கெல்லாம் சென்று செல்வத் தைத் திரட்டியவர்கள் நாம். காணி காணியாய்ச் சேர்த்துக் கோடி கோடியாய்த் தருமமும் செய்த பெருங்குலத்தில் தோன் றியவர்கள்தாம். நமது ஆற்றலை நாம் சிந்தித்தால், சிந்தித்து முயன்றால், வெற்றி நிச்சயம்.

எல்லாம் வல்ல இறைவன் நமக்கு நல்வழி காட்டி, நாமும் உலகத்தவரோடு ஒத்தவண்ணம் முன்னேறத் திருவருள்புரிய வேண்டும் என்று உங்கள் எல்லோருடனும் கூடி நானும் அவனடி மலரைப் பணிந்து வேண்டிக் கொள்ளுகிறேன்.

காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலம் திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வெல்வணிகர்–வீடுகட்கு
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா இலக்குமிநீ
என்றைக்கும் நீங்காது இரு.

என்ற பிரார்த்தனையுடன் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

வாழ்க நகரத்தார் சங்கம்!
வளர்க அதன் நற்பணி!